# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 307/பேரூ/2025**

**நாள்:19.08.2025**

திரு. ஆ. முருகேசன்,
திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின்
செயற்பொறியாளர் (தற்காலிக பணி நீக்கம்),
சிதம்பரம், கடலூர் மாவட்டம்

முறையீட்டு மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின்
உதவி இயக்குநர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம், எண். 59, பெரியார் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் (தற்காலிக பணி நீக்கம்) என்பவரது 04.06.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.06.2025 அன்று பெறப்பட்டு 307/பேரூ/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

கடலூர் மாவட்டம், சிதம்பரம், 59, பெரியார் தெரு என்ற முகவரியைச் சார்ந்த மனுதாரர் திரு. ஆ. முருகேசன் என்பவர் தனது 04.06.2025 நாளிட்ட மனுவில் திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளராக பணியாற்றி வந்த தன்னை தனது பணி ஓய்வு நாளான 29.02.2020 ஒரு நாள் முன்னதாக 28.02.2020ல் எந்த ஒரு குற்றச்சாட்டும் பிறப்பிக்காத நிலையில் தற்காலிகப் பணி நீக்கம் செய்தது குறித்தும் பின்னர் 3 ஆண்டுகள் கழித்து குற்றச்சாட்டுக் குறிப்பாணை பிறப்பித்தது குறித்தும் மேற்படி குற்றச்சாட்டில் இருந்து தன்னை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக 6 ஆண்டு காலமாக பல்வேறு விளக்கங்கள் மற்றும் கடிதங்கள் அனுப்பியும் அவை உதாசீனப்படுத்தப்பட்டதை மாண்புமிகு நடுவண் நீதிபதி அவர்கள் கருணையுடன் பரிசீலித்து தன் மீதான தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17 (b)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணையை கைவிட உத்தரவிடுமாறும், உரிய பணி ஓய்வு உத்தரவு வழங்க உத்தரவிடுமாறும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் திரு. ஆ. முருகேசன் சமர்ப்பித்துள்ள புகார் மனுவினை உரிய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் திரு. ஆ. முருகேசன்

என்பவர் திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளராக பணியாற்றும் போது கடலூர் மாவட்டம் திட்டக்குடி பேரூராட்சியில் (தற்போது நகராட்சி) TURIP 2016-2017 திட்டத்தின் கீழ் பெருமுளை ரோட்டிலிருந்து அரசு கலைக் கல்லூரி வரை மற்றும் கோடங்குடி சாலையில் தார்சாலை அமைக்கும் பணியில் அளவீட்டு புத்தகத்தில் (M BOOK) உள்ள அளவீடுகளை (ரூ.94,40,055.33) விட குறைவான மதிப்பீட்டில் ரூ.48,69,624.78க்கு சாலை அமைத்து அதிக மதிப்பீட்டில் தார்சாலை அமைத்ததாக போலியான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதன் மூலம் அரசுக்கு ரூ.45,70,430.55 நிதியிழப்பு ஏற்பட்டது தொடர்பாக அரசாணை (2D) எண். 15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (TP IV) துறை நாள் 26.02.2020–ல் வெளியிடப்பட்ட ஆணையில் மனுதாரர் திரு. ஆ. முருகேசன், செயற்பொறியாளர் என்பவரை தற்காலிக பணிநீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசாணை (2D) எண். 19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (TP IV) நாள் 28.02.2020–ல் வெளியிடப்பட்ட ஆணையில் அடிப்படை விதிகளில் (Fundamental Rules) விதி 56(1)(c)-ன்படி வயது முதிர்வின் காரணமாக திரு. ஆ. முருகேசன் என்பவர் 29.02.2020 அன்று பிற்பகல் பணியிலிருந்து ஓய்வு பெற இருந்ததற்கு அனுமதி வழங்க மறுத்தும் மற்றும் அன்னார் மீது சுமத்தப்பட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகள் முடியும் வரையில் தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள மனுதாரரை பணியில் முடக்கி வைத்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மனுதாரர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)ன் கீழ் 13.01.2023 நாளிட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண். 2492/2019/ஊ3-ல் சார்பு செய்யப்பட்டு, ஒழுங்குமுறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (2)–ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் மற்றும் பிரிவு 2 (3)-ன் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையீட்டிற்கும் மட்டும் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்நிலையில் மனுதாரர் தனது புகார் மனுவில், தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை கைவிட உத்தரவிடவும் மற்றும் உரிய பணி ஓய்வு உத்தரவு வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோருவது பேரூராட்சிகளின் இயக்குநரின் பணியமைப்பு தொடர்பான பொருண்மை என்பதால், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள 04.06.2025 நாளிட்ட மனுவை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க வழிவகையில்லை என்ற நிலையில் இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஆ. முருகேசன்,
முன்னாள் செயற்பொறியாளர்,
பேரூராட்சிகள் (த.ப.நீ.)
எண். 59, பெரியார் தெரு, சிதம்பரம் – 608 001.

2) உதவி இயக்குநர்,
திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின்
உதவி இயக்குநர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்